**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# தானியேல் 4

தானியேல் 4ம் அதிகாரத்தை பின்வருமாறு நாம் பிரிக்கலாம்.

1. விருட்சத்தைக் குறித்த நேபுகாத்நேசரின் கனவு (4:1-18)
2. கனவிற்களன தானியேலின் விளக்கம் (4:19-26)
3. கனவின் நிறைவேற்றம் (4:27-33).
4. நேபுகாத்நேச்சர் மீண்டும் ஆட்சிக்கு வந்து ஆண்டவரை மகிமைப்படுத்துதல் (4:34-37).

முக்கியமான தகவல்

இந்தக்கனவு 32 வருடங்களுக்குப் பின்பு நடைபெறுகின்றது். நேபுகாத்நேச்சர் தானியேல் மற்றும் 3நன்பர்கள மூலமாய் ஆண்டவரைப்பற்றித் தெரிந்துகொள்கிறார். ஆனாலும் முந்திய அதிகாரத்தில் நாம் பார்த்தோம˙7 வருடங்கள் ஆனபின்பும் தான் மனம் மாறாமல் தானியேலின் நண்பர்களான சாத்ராக், மேசாக், ஆபத்நேகவை அக்கினிச் சூளைக்கு அனுப்பினார்..

## கனவு

நேபுகாத்நேச்சர் இந்த இரண்டாம் கனவை ஞாபகத்தில் வைத்து அதை தன்னுடைய அரன்மனையில் உள்ள மந்திரவாதிகளிடம் கூற ஆனால் அவர்களால் அதற்கான அர்த்தத்தைக் கூற முடியவில்லை. இங்கே நாம் பார்ப்பது மற்றவர்களால் அர்த்தம் கூறமுடியாமல் போனபின்பு கடைசியில் தான் தானியேலை அழைக்கிறார். முதல் கனவையும் அதன் அர்த்தத்தையும் கூறிய தானியேலை முதலாவது நினைக்காதது ஆச்சரியம் அல்லவா! சில வேளைகளில் மக்கள் உடனடியாகக் கற்றுக்கொள்வதில்லை. நாம் கூட அப்படித்தான்.

தானியேல் வந்தவுடன் நேபுகாத்நேச்சா அவனை பாபிலோனிய கடவுளின் பெயரைக் கொண்டே அழைக்கிறார். தானியேலும் அவர்களுடைய நண்பர்களும் உண்மையுள்ள ஆண்டவரைக் குறித்

ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினாலும், அது அவருடைய மனதை மாற்றவில்லை.ஆண்டவரைக் குறித்த நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பது மட்டும் ஒருவரை இரட்சிப்புக்குள் அழைத்துச் செல்லாது.

## விருட்சம்

கனவில் வருகின்ற அந்த மரம்(விருட்சம்) ஒரு பெரிய பிரமிப்பானதாய் அதின் அளவில், முக்கியத்துவத்தில், பலத்தில், பாதுகாப்பு கொடுப்பதில் மற்றும் பழங்கள் இருப்பதை காணமுடிகின்றது. ஒரு தேவதூதன் வந்து அதின் எல்லா முக்கிய அம்சங்களையும் அழித்து அதின் தண்டை மாத்திரம் விட்டுவிட்டு அதையும் இரும்புச் சங்கிலியில் கட்டி வைக்கப்படுகிறது அதை ஆளுகின்ற மனிதனின் இருதயம் மிருகமாய் மாறுகின்றது. இதன் மூலமாய் பூமியிலுள்ள அனைவருக்கும் உன்னதத்தின் தேவனே எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறார் என்று உணரவேண்டும்.

## கனவின் விளக்கம்

வசனம் 19
***அப்பொழுது பெல்தெஷாத்சாரென்னும் பெயருள்ள தானியேல் ஒரு நாழிகைமட்டும் திகைத்துச் சிந்தித்துக் கலங்கினான். ராஜா அவனை நோக்கி: பெல்தெஷாத்சாரே, சொப்பனமும் அதின் அர்த்தமும் உன்னைக் கலங்கப்பண்ணவேண்டியதில்லை என்றான்; அப்பொழுது பெல்தெஷாத்சார் பிரதியுத்தரமாக: <u>என் ஆண்டவனே, அந்தச் சொப்பனம் உம்முடைய பகைவரிடத்திலும். அதின் அர்த்தம் உம்முடைய சத்துருக்களிடத்திலும் பலிக்கக்கடவது.</u>***

தானியேலின் பதிலை சற்றுக் கவனியுங்கள். அதின் மூலமாய் அவருடைய இருதயத்தை சற்றுப் பாருங்கள். தானியேல் நேபுகாத்நேச்சரை “என் ஆண்டவனே” என்று அழைக்கிறார்.ஒரு ஆச்சரியம் இது தானியேல் தேவனுடைய திட்டங்களையும், செயல்பாட்டையும் அறிந்ததின் பயனாய் அவருடைய பேச்சு இருந்தது.

இது உம்முடைய எதிரிக்குக் கூட வரக்கூடாது. இயேசுகிறிஸ்து நமக்கு நாம் நம்முடைய எதிரிகளை நேசிக்கவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டிக்கொண்டார் (மத்தே 5:43-45).

தேவன் இன்றைக்கு நம் மத்தியில் தானியேலை தேடிக்கொண்டிருக்கிறார். அப்போது தான் இந்த உலகத்திற்கு தேவனுடைய அன்பையும், அவருடைய ஞானத்தையம் அவர் உலகிக்குக் காட்டமுடியும்.

எரே 29:7

***நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்***.

தாவீது ஒரு சிறந்த உதாரணமாய் இருக்கின்றார். தான் ராஜா அபிசேகம் பண்ணப்பட்ட பின்பு சவுல் ராஜா தன்னுடைய படையுடன் தாவீதைக் கொலை பண்ண அலையும்போது தனக்கு இரண்டு சந்தப்பம் வந்தும் அதை மறுத்தார் தாவீது. ஒரு வேளை தாவீது சவுலைக் கொண்டிருந்தால் ஆண்டவர் ஒன்றும் சொல்லியிருக்கமாட்டார். ஆனாலும் தாவீது ஒரு முன்னுதாரமாக வாழ்ந்தார்.
தானியேல் நேபுகாத்நேச்சருக்கு அவர்தான் அந்த மரம் என்றும் அவருடைய இராஜ்யம் பரந்து விரிந்து இருக்கின்றது. அதை தேவதூதர்கள் ஒடித்து அவருடைய இராஜ்யத்தைச் சிறுமையாக்கி அவரை மிருகமாக மாற்றிவிடுவார். இதன்மூலம் நேபுகாத்நேச்சர் ஆண்டவரே உண்மையான தேவன் என்றும் அவரே சகலத்தையும் ஆளுகை செய்கிறார் என்று உணரவேண்டும்

தானியேலுக்கு இருந்த உண்மையான அக்கறை நம் அனைவருக்கம் ஆண்டவரைப்பற்றி, மக்களைக் குறித்து இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் தன்னுடைய பாவங்களிருந்து மனம் திரும்பி தேவன் மீது விசவாசம் வைத்து தங்களை இரட்சிக்க ஆண்டவரை ஏற்றுக்கொள்ள வேண்டம்.

1. பாவங்கள் /அக்கிரமங்களை உடைத்தெறியவேண்டும்.
2. ஏழைகளுக்கு இரங்க வேண்டும்.

பாவங்கள் அக்கிரமங்கள் என்றவைகளை அகற்றி அவற்றிலிருந்து வரவேண்டும் என்பதே தானியேலின் இருதயத்திலிருந்து வந்த வேண்டுகோள். நேபுகாத்நேச்சருக்கு நினிவே பட்டணத்தில் நடந்த காரியங்கள் நன்றாக தெரிந்திருக்கும். யோனா தீர்க்கதரிசியின் மூலமாய் எவ்வாறு தேவன் பேசினார். மக்கள் மனம் திரும்பீயவுடன் எப்படி அவர்களைக் காப்பாற்றினார். பின்பு

அவர்கள் வழிமாறிய பின்பு 612 BC ல் முழுவதுமாய் அந்தப் பட்டணம் அழிக்கப்பட்டது என்பது நேபுகாத்நேசர் நன்கு அறிந்த சம்பவம்.

இன்றைக்கு நாம் கிறிஸ்தவத்தில் நம்முடைய வேண்டுகோள் பாவத்தை விட்டு தேவனை நோக்கி திரும்புங்கள் என்பதே.

ஏழைக்கு இரங்குவது என்பது நமது முழு வேதவசனம் முழுவதிலும் நாம் காணலாம். காரணம் அது தேவனுடைய இருதயம். ஏழைக்கு இரங்குவது, விதவைகளுக்கு ஆதரவு அளிப்பது என்ற இரு காரியங்கள் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வசனம் 29
***<u>பன்னிரண்டு மாதம் சென்றபின்பு</u> ராஜா பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது*:**

நம்மால் தேவனுடைய இரக்கத்தைக் காணமுடிகிறதா?

ஆண்டவர் நேபுகாத்நேச்சருக்கு 12 மாதங்கள் கால அவகாசம் கொடுக்கிறார். நேபுகாத்நேச்சர் பாவத்தைவிட்டு தேவன் பக்கம் திரும்ப எவ்வளவு கருணையாக நடந்துகொள்கிறார். ஆனால் அவர் அதை ஏற்றுக்கொண்டாரா?

நாம் இன்றும் தேவனுடைய இரக்கத்தை கண்கூடாய் காணமுடிகிறது.மக்கள் தினந்தோறும் எவ்வளவோ பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் தேவனுடைய இருதயத்தைக் காயப்படுத்தினாலும் தேவன் எவ்வளவு பொறுமையாயிருக்கின்றார்? தேவனுடைய நியாயத்தீர்ப்பை நாம் எளிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது

## பெருமை

பெருமை எவ்வளவு மோசமானது என்பதை நாம் நேபுகாத்நேச்சர் வாழ்வில் கான் காணமுடிகின்றது. நாம் மனத்தாழ்மையைக் குறித்து விரிவான செய்தியை நமது ஞயிற்றுக் கிழமைகளில் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

வசனம் 30,

***இது <u>என் வல்லமையின்</u> பராக்கிரமத்தினால், <u>என் மகிமைப்பிரதாபத்துக்கென்று</u>, ராஜ்யத்துக்கு அரமனையாக <u>நான் கட்டின மகா பாபிலோன்</u> அல்லவா என்று சொன்னான்.***

- மகாபெரிய பாபிலோன்
- நான் கட்டின
- எனது வல்லமையினால்
- எனது மகிமைக்காக

பாபிலோன் தோண்டியெடுத்த புதைபொருள்.ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்த செங்கல்களில் கீழ்கண்டவாறு உள்ளது.
‘‘நேபுகாத்நேச்சர், பாபிலோன் ராஜா, எஸ்கலியா, எஸடியா ஆதரித்து மகாமேன்மைபொருந்திய நேபோலேசரின் முதலாவது குமாரன், பாபிலோனிய ராஜா’’

நேபுகாத்நேசரின் வார்த்தையும் சாத்தானின் வார்த்தையும் ஒரே மாதிரி இருப்பதைக் காணலாம்.

ஏசாயா 14:13-14

***<u>நான் வானத்துக்கு</u> ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக <u>என் சிங்காசனத்தை</u> உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், 14. <u>நான் மேகங்களுக்கு மேலாக</u> உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் <u>நீ உன் இருதயத்தில்</u> சொன்னாயே.***

பெருமைதான் நமது முதலாவது எதிரி. நமது சீசத்துவ வகுப்பில் இதைக்குறித்து ஆழமாய்ப் பார்த்தோம். தேவன் பார்க்கும் பாவங்கள் நாம் பார்ப்பதைக் காட்டிலும் எவ்வளவாக வேறுபட்டிருககின்றது.

நாம் மனத்தாழ்மையில் வளரவேண்டியது அவசியம்.நாம் மனத்தாழ்மையுடன் வாழவேண்டும், என்பதை எவ்வளவு அழுத்தமாக சொல்லவேண்டுமோ அப்படிக் சொல்கின்றேன்.

## மிருகத்தைப் போல

தன்னைக்குறித்த பொறுமையான வார்த்தை நேபுகாத்நேச்சர் வாயிலிருக்கம் போதே அவர் ஒரு வேலைக்காரனைப்போல துரத்தப்பட்டு ஒரு மிருகமாய் மாறி ஏழுவருட காலங்கள் தன்னுடைய ராஜ்யத்தை இழந்து புல்லைத் திண்று வாழ்கின்றான். இப்படியாக தேவன் சொன்ன வார்த்தை நிறைவேறுகின்றது.

582 BC யிலிருந்து 575 ஆண்டுமட்டும் நேபுகாத்நேச்சர் அரசாண்டவரலாறு சரித்திரப் புத்தகத்தில் இல்லையென்பது நமக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. தேவனுடைய வார்த்தை எவ்வளவு சத்தியம்.

தேவன் நேபுகாத்நேச்சர் தன்னைத் தாழ்த்துவதற்கு ஒரு சந்தப்பம் அளிக்கிறார். ஆனால் அவரோ அதை ஏற்றக்கொள்ளாததினால் தேவன் அவனைத் தாழ்மைப்படுத்துகின்றார். நேபுகாத்நேச்சரை தானாக தாழ்மைப்படுத்தியிருந்தால் இவ்வளவு கொடுமையாக இருந்திருக்காது. இப்பொழுது தேவன் உங்களை என்ன செய்யச்சொல்கிறார். நீங்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்கின்றீர்களா?

## தேவனுக்கு மகிமை

7 வருட முடிவில் நேபுகாத்நேச்சர் பரலோகத்தின் தேவனை நோக்கி பார்த்தவுடன் அவருடைய எண்ணங்கள் திரும்பவந்து அவர் மீண்டும் அரசனாக ஆளுகின்றார்.நாம் ஆராதிக்கும் தேவன் ஜீவனுள்ள தேவன் மாத்திரமல்லாமல் அவர் அகில உலகங்களையும் ஆளக்கூடிய தேவனாக இருக்கிறார்.சந்திரன்,சூரியன் மற்றும் அனைத்துக் கிரகனங்கள் அவருடைய வார்த்தைக் கீழ்பட்டு செயல்படுகின்றது.

நேபுகாத்நேச்சர் ஆண்டவரை ஆராதித்துச் சொன்னது,

***நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.***

நாமும் தேவனை ஆராதித்து அவருக்கு பயத்துடன் கூடிய மகிமையைச் செலுத்தி அவரோ நமது வாழ்வில் எல்லாமுமாய் இருக்கட்டும்.

நம்மில் இந்தச் செயல்பாடு இருக்கட்டும்.

- மனத்தாழ்மையோடு தேவனை ஆராதிப்போம்.
- தேவனுடைய வழிகளை கேள்வி கேட்காமல் கீழ்படிவோம்.
- பயபக்தியுடன் தேவனோடு வாழ்வோம்.
- நமது வாழ்வின்மூலம் தேவனை ஆராதிப்போம்.
- மகிழ்ச்சியோடு தேவனுக்கு பணிவிடை செய்வோம்.

இந்த அதிகாரத்திலிருந்து நாம் நேபுகாத்நேச்சரின் வாழ்விலிருந்து எப்படி தாழ்மையாக வாழவேண்டும் என்றும்,தானியேல் வாழ்விலிருந்தும் நாம் தேவன் நம்மை எங்கு வைத்திருக்கின்றாரோ அங்கு உண்மையும் உத்தமமுமாய் வாழவேண்டும்.

தேவனை நோக்கிப் பார்த்து நாம் இந்தப் பூமியில் கிறிஸ்துவைப்போல் வாழ்வோம்.

அடுத்த வாரம் நாம் 7ம் அதிகாரத்தைப் பார்ப்போம்.நாம் தானியேல் வாழ்வில் நடந்ததுபோலவே இந்தப் புத்தகத்தைப் பார்ப்போம்.

Approximate years!

1. Chapter 1 – Refuses King's Delicacies, 606 BC under Nebuchadnezzar
2. Chapter 2 – Great Golden Image, 603 BC
3. Chapter 3 – Golden Stature/Fiery Furnace, 587 BC under Nebuchadnezzar
4. Chapter 4 – Nebuchadnezzar's Judgment, 571 – 562 BC
5. Chapter 7 – Four Beasts, Little Horn, Ancient of Days, 553 BC
6. Chapter 8 – Ram and the Goat, 551 BC
7. Chapter 5 – Writing on the Wall, 539 BC
8. Chapter 6 – Lion's Den, 538 BC under Darius
9. Chapter 9 – Seventy Weeks, 538 BC
10. Chapter 10 – 12 – King of the North and King of the South to 1335 days, 538~536 BC

.